

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் இளையான்குடி மேல்நிலைப் பள்ளியின் பவளவிழா மலரினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வெளியிட மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் பெற்றுக்கொண்டார். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. தொழிலதிபர் அ.முகமது உட்பட பள்ளி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### சிவகங்கை மாவட்டம்

# திருப்பத்தூர் - காரைக்குடியில் தொகுதி பாகமுகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, ஆக. 2 -

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் கடந்த 30ஆம் தேதி சிவகங்கை மானாமதுரை சட்டமன்றத் தொகுதிகளுக்கான பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்று முடிந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக நாளை 3ம் தேதி காரைக்குடி திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கான பாகமுகவர்கள் கூட்டம். கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

எனவே இந்த கூட்டத்தில் பாகமுகவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவர்களை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். இந்த கூட்டத்தில் பாகமுகவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்

நாள் 3.8 .2023. வியாழக்கிழமை - நேரம் காலை 10 மணி - காரைக்குடி சட்டமன்றத் தொகுதி - இடம் அபூர்வா திருமண மஹால் - காரைக்குடி.

மாலை 4 மணி - திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி - இடம் சிந்தாமணி மஹால் - புதுக்கோட்டை - சாலை திருப்பத்தூர்.

இந்த கூட்டத்தில் வருகிற 17ஆம் தேதி ராமநாதபுரத்தில் நடைபெறும் தென்மண்டல பாகமுகவர்கள் கூட்டத்தில் தமிழக முதல்வரும், கழக தலைவருமான தளபதி அவர்கள் கலந்து கொண்டு வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாகமுகவர்கள் ஆற்றிட வேண்டிய தேர்தல் பணி குறித்து விளக்க உரையாற்றுவதால் அனைவரும் நாளை (3ம்தேதி) நடைபெறும் பாக முகவர்கள் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு. அமைச்சர் பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி உள்ளார்.



திருப்புவனம் ஒன்றியம் கீழடியில் ரூ.12 லட்சம் செலவில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து பயணியர் நிழற்குடைக்கான அடிக்கல் நாட்டு விழா திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கைமாறன் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடசுப்பிரமணியன், ஒன்றிய கவுன்சிலர் வைத்தீஸ்வரி ஆறுமுகம் முன்னிலையில் நடைபெற்றது. அடிக்கல் நாட்டும் விழாவை மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கடம்பசாமி. நகரச் செயலாளர் நாகூர்கனி, பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், ஒன்றியக் கவுன்சிலர்கள் சுப்பையா, ராமு, ஒன்றிய நிர்வாகிகள் மகேந்திரன், இளங்கோவன், ரவி, கோபால், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் தேவதாஸ், மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் சங்கர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - ஒன்றிய / நகர / பகுதி வாக்குச் சாவடி முகவர்களுக்கான (பி.எல்.ஏ. 2) ஆய்வுக் கூட்டங்கள்!



## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - ஒன்றிய, நகர, பகுதி வாக்குச் சாவடி முகவர்களுக்கான (பி.எல்.ஏ. 2) ஆய்வுக் கூட்டம் கீழ்க்கண்ட, அட்டவணைப்படி நடத்தப்பட உள்ளது.

| வ. எண் | நாள் | நேரம் | ஒன்றியம்/நகரம்/பகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1 | 02.08.2023 புதன் | மாலை 4 மணி | நாகர்கோவில் தெற்கு பகுதி | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி |
| 2 | 02.08.2023 புதன் | மாலை 6 மணி | நாகர்கோவில் கிழக்கு பகுதி | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி |
| 3 | 03.08.2023 வியாழன் | மாலை 5 மணி | தோவாளை வடக்கு ஒன்றியம் | சமூக நலக்கூடம், தெரிசனங்கோப்பு |
| 4 | 04.08.2023 வெள்ளி | மாலை 4 மணி | நாகர்கோவில் வடக்கு பகுதி | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி |
| 5 | 04.08.2023 வெள்ளி | மாலை 6 மணி | நாகர்கோவில் மேற்கு பகுதி | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி |
| 6 | 05.08.2023 சனி | மாலை 4 மணி | குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | ARR ஆடிட்டோரியம், பருத்திவிளை, மண்டைக்காடு |
| 7 | 05.08.2023 சனி | மாலை 6 மணி | குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | பத்மநாப மண்டபம், வெள்ளிச்சந்தை |
| 8 | 06.08.2023 ஞாயிறு | காலை 10 மணி | குளச்சல் நகரம் | S.P.M. ஹால், குளச்சல் |
| 9 | 06.08.2023 ஞாயிறு | மாலை 5 மணி | அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | அகஸ்தீஸ்வரம் ஒன்றிய கழக அலுவலகம், கொட்டாரம் |
| 10 | 07.08.2023 திங்கள் | மாலை 5 மணி | அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | ஆதிலட்சுமி மண்டபம், மைலாடி |
| 11 | 08.08.2023 செவ்வாய் | மாலை 5 மணி | தக்கலை தெற்கு ஒன்றியம் | உமா மண்டபம், இரணியல் |
| 12 | 09.08.2023 புதன் | மாலை 5 மணி | தோவாளை கிழக்கு ஒன்றியம் | ராகவி மண்டபம், தாழக்குடி |
| 13 | 10.08.2023 வியாழன் | மாலை 6 மணி | இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் | இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றிய கழக அலுவலகம், தெங்கம்புதூர் |
| 14 | 11.08.2023 வெள்ளி | மாலை 5 மணி | இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் | கிளைச் செயலாளர் தங்கராஜா அவரது இல்ல வளாகம், காரவிளை |

**ரெ.மகேஷ்**
செயலாளர்
கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

# தமிழர்களே சற்று சிந்திப்பீர்!



**வி.செ.குகநாதன்**
*திரைப்பட இயக்குனர்*

என் இனிய தமிழ் சொந்தங்களே……!

இன்று இந்தியாவில் ஏழைகள் எதுவும் பேசுவதில்லை.தாழ்ச்சியுற்றோரும் பேசத் தயங்குகிறார்கள்.ஆனால் அவர்கள் விடுகின்ற பெருமூச்சு ஆட்சியாளர்களுக்கு தெரிவதில்லை.இது பேச்சை விட வலிமையானது. கோபம் நிறைந்தது. வேதனைகளின் வெளிப்பாடு. இத்தகைய பெரு மூச்சுக்களே பெருகிப் பெருகி பல நாடுகளில் புரட்சியாக வடிவம் கொண்டிருக்கிறது.

இந்த நிலையிலேதான் ஒன்றிய ஆட்சியாளர்கள் ஏக இந்தியா என்று மார்தட்டுகிறார்கள். கார்ப்பரேட்டுகளை கடவுள்கள் ஆக்கி வாக்காளர்களை பக்தர்கள் ஆக்கி அங்கிருந்து பெறுவதிலே ஒரு பகுதியை இவர்களுக்கு பகிர்ந்து அளித்து. இவர்களது வாக்குகளை பெற்று மூன்றாவது முறையும் தாங்கள் டெல்லி பூசாரிகள் ஆகிவிடலாம் எனத் திட்டமிடுகிறார்கள். இதைத்தான் இவர்கள் ஏக இந்தியாவின் சோசியலிசம் என்று வாய்கிழிய பேசுகிறார்கள்.

அடிபட்ட ஆட்டுக்குட்டிக்கு ஓநாய் ரத்த தானம் செய்ய வந்தது போல்தான் இவர்கள் பேசுகின்ற சோசியலிசமும். மதப் புரட்டுகளை ஒழிக்க போகிறேன் என அமித்ஷா சொல்வாரா? கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்தப் போகிறேன் என ஜெயசங்கர் அறிவிப்பாரா? ஏதேச்சதிகாரத்தை அழிக்கப் போகிறேன் என நிர்மலா சீதாராமன் பேசுவாரா?

நிலமற்ற விவசாயி - மாடாய் உழைக்கும் தொழிலாளி நிம்மதி இழந்த பாட்டாளி உரிமைகளற்ற பட்டியல் இனத்தவர் வேலையற்ற பட்டதாரிகள் வேதனையிலேயே வாடுகின்ற மாற்று மதத்தினர் என்று தீரும் இந்தக் கொடுங்கோல் ஆட்சி எனக் கதறி கண்ணீர் வடிக்கும் பெண்கள்....இந்தக் காட்சிகள்தான் இந்தியாவில் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

இத்தகைய நிலையில் மாற்றான் தாய் போல் மாற்றுக் கட்சிகள் நடந்து கொள்வது தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் நல்லதல்ல! ஒருபுறம் மணிப்பூர் எரிகிறது. மறுபுறம் ஒன்றிய அரசோ அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் மூன்றாம் முறையாக ஆட்சியைப் பிடிக்கும் வேட்டைக்கு கிளம்பி விட்டது. ராமேஸ்வரத்திலிருந்து ஆரம்பமாகிறது. தமிழா புரிகிறதா சூட்சுமம்?

விவசாய நிலங்களை கையகப்படுத்துவதும் நெய்வேலி நிர்வாகத் தவறுகளும் இன்று நேற்று நடப்பதல்ல. முதலில் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி அதன் பின் அனைவரும் சேர்ந்து ஒற்றைக் குரலிலே போராட வேண்டிய விஷயம் அது!

இன்று ராமேஸ்வரத்தில் அவர்கள் அதே தினத்தில் ஒன்றிய அரசின் கூட்டணிக் கட்சியின் நெய்வேலி போராட்டம். இங்கே போலீஸ் தடியடி, சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவாகிறது. ராமேஸ்வரத்தில் கலந்து கொள்ள வேண்டிய கூட்டணி கட்சியினர் அதே தினத்தில் நெய்வேலியில் போராட்டம் நடத்துவது முன் ஏற்பாடா? அல்லது வேண்டுமென்று செய்யப்படும் விஷமத்தனமா? கேட்க மாட்டார்கள் தமிழர்கள்!

இதே மாதிரி முன்பொரு நாள் ஒரு நடிகருக்காக நெய்வேலி நிலக்கரி ஆலை முன்னால் கூடிய கூட்டத்தையும் தமிழக மக்கள் ஊடகங்களிலே பார்த்திருக்கிறார்கள் அல்லவா? மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்கள் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். அதில் விவசாய நிலத்தை கையகப்படுத்தும் விஷயத்தில் அரசு மக்கள் பக்கம் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இதனை போராட்டத்துக்கு முன்பல்லவா சொல்லியிருக்க வேண்டும்.அரசின் முடிவை தெரிந்த பின்னால் அல்லவா போராட்டத்தில் குதித்து இருக்க வேண்டும். ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் போராட்டங்கள் ஏற்கப்பட்ட ஒன்றுதான்.

ஆனால் தற்போது உள்ள நிலையில் மணிப்பூரில் நடப்பதற்கு முதலிலேயே தீர்வு காண வேண்டுமா வேண்டாமா? அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னால் தமிழ்நாடு என்று ஒரு மாநிலமே இருக்காது என்ற அறைகூவல் விடப்படும் போது, நாம் எதை முதன்மைப் படுத்த வேண்டும் என்பது சில அரசியல் கட்சிகளுக்கு புரியாமல் இருக்கலாம். அல்லது புரிந்தும் புரியாதது போல் நடந்து கொள்ளலாம்.ஆனால் மருத்துவர் அய்யாவுக்கு எல்லாமே சரியாகத் தெரியும்.அவர் தமிழினப் பற்றாளர். வேண்டுமென்று வெட்டப்பட்டாலும்.... தானாக வெடிப்பு விரிவானாலும் ஏற்படுவது பள்ளம் தான்! அத்தகைய பள்ளங்களை தற்போதைய சூழலில் தமிழ்நாட்டில் உருவாக்குவது ஏற்புடையதா? தமிழர்கள் கட்சிகளை மறந்து இதனை சிந்திக்க வேண்டும்!

### சேங்கைமாறன் நிகழ்ச்சி ஏற்பாடு! திருப்புவனத்தில்

# கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.பெரியகருப்பன் - நாஞ்சில் சம்பத் - மு.தென்னவன் - ஆர்.தமிழரசி பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 2 -

சிவகங்கை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட்டங் கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் ஒன்றிய,நகர பேரூர் பகுதிகளில் நடைபெற்று வருகிறது .

இதன் தொடர்ச்சியாக திருப்புவனம் மேற்கு ஒன்றிய கழகம் திருப்புவனம் பேரூர் கழகத்தின் சார்பில் வாரச்சந்தை திடலில் மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு தலைவர் பி.திருநாவுக்கரசு தலைமையில் மேற்கு ஒன்றியச் செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கைமாறன், எம்.ஏ. கடம்பசாமி, ஒன்றியக் குழு தலைவர். பா. சின்னையா, துணைத்தலை வர் மூர்த்தி பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளரும் திருப்பு வனம் பேரூராட்சி மன்ற தலைவருமான த. சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார்.

மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட துணைச் செயலாளர் கே. எஸ். எம். மணிமுத்து ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் நாஞ்சில் சம்பத் தலைமையில் இனிய தலைவர் கலைஞரை மீண்டும் மீண்டும் பேச காரணம் இனத்தின் மீட்சியே என்ற தலைப்பில் பேராசிரியர் முனைவர் மானசீகன், கவிஞர் பிரபாகரன், மொழியின் மாட்சியே என்ற தலைப்பில் பேராசிரியர் அன்பு, பேராசிரியர் மலர்விழி, ஆகியோர் வாதிட்டார்கள். டி.ஆர். சேகர் நன்றி கூறினார். பொதுக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் துணை அமைப்பாளர் கே. எம்.பொற்கோ பொதுக்குழு உறுப்பினர் ஏஆர்.ஜெய மூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. மாரியப்பன் கென்னடி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், ஒன்றியச் செயலாளர்கள் துரை ராசாமணி, கே.பாலசுப்பிரமணியன், எம்.அண்ணாதுரை, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஈஸ்வரன், ஆர் வெங்கடேசன், ஆர் .அக்னி ராஜ், பி. இளங்கோவன் , மூ .ரவி. சக்தி, முருகன், மோ.ராமு, அன்னமுத்து, இளங்கோவன், சங்கர், மணிகண்டன், ரவிச்சந்திரன், கருப்புசாமி , ராம் பிரபு, மலைராஜன், தேவதாஸ்,

பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரஹ்மத் துல்லா கான் த.இரா. நெடுஞ்செழியன் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் ஒன்றிய கழகச் செயலாளர் திருமதி வசந்திசேங்கைமாறன் பேரூர் கழகச் செயலாளர் நாகூர்கனி மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திருச்செந்தூர் வட்டம் அடைக்கலாபுரம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் , மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர். எஸ் உமரிசங்கர், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம் ஆகியோர் உடன் உள்ளனர்.